# பதவி வெற்றிடத்திற்கான விளம்பரம்

**கல்வி, தகவல்தொழில் நுட்பம் மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கான அமைச்சு**

**சபரகமுவ மாகாண சபை**

**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்தில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி மற்றும் இரத்தினபுரி, நிவித்திகல, தெஹியோவிட்ட, பலாங்கொட ஆகிய வலயங்களுக்கான வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு தெரிவு செய்தல்.**

சபரகமுவ மாகாண கல்வி அமைச்சின் கீழ் தற்போது வெற்றிடமாக காணப்படும் கீழ் வரும் பதவிகளுக்கு இலங்கை கல்வி நிருவாக சேவையில் 1ஆம் தர அலுவலர்களிடமிருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பம் கோரப்படுகிறது.

| தொ. இல | வெற்றிடத்திற்கான பதவி | அனுமதி தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் | இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 | 01 |
| 02 | வலயக்கல்விப் பணிப்பாளர் (தெஹியோவிட்ட) | இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 | 01 |
| 03 | வலயக்கல்விப் பணிப்பாளர் (பலாங்கொட) | இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 | 01 |
| 04 | வலயக்கல்விப் பணிப்பாளர் (இரத்தினபுரி) | இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 | 01 |
| 05 | வலயக்கல்விப் பணிப்பாளர் (நிவித்திகல) | இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 | 01 |

## 01. தகுதிகள் :-

- இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 1 ஆம் தர அலுவலராக இருத்தல்.
- விண்ணப்பத்தாரர் பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினமாகிய **2023.04.28** அன்றைக்கு அண்மித்த 5 வருடங்களில் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகாதவராகவும், அந்த 5 வருடங்களுக்குரிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.
- எல்லா விண்ணப்பத்தாரர்களும் தமது பதவியில் சேவை செய்வதற்கு போதுமான உடல் உள ஆரோக்கியத்தைதையும் கொண்டிருத்தல் வேண்டும்.

## 02. தெரிவு செய்யும் முறை :-

மேலே இல.01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகுதிகளையுடைய விண்ணப்பங்களை முன்வைக்கின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 ஆம் தர அதிகாரிகள், சபரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் முறையான நேர்முகப் பரீட்சையில் அனுமதிக்கப்பட்ட புள்ளி நியதிகளுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும். அவ்வாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின், திறமைகளின் அடிப்படையில் உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் குறித்த பதவிகளுக்காக தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (நிர்ணயிக்கப்பட்ட புள்ளி பெறும் நியதிகள் www.moe.sg.gov.lk என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது)

**குறிப்பு:** தகுதிகளை உறுதிப்படுத்தப்பட்ட அனைத்து சான்றிதழ்களினதும் அத்தாட்சிபடுத்தப்பட்ட பிரதிகளும், அத்தாட்சிபடுத்தப்பட்ட அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றுப்பத்திர பிரதிகள் ஆகியவை விண்ணப்பபடிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

## 03.விண்ணப்பித்தல் :-

அனைத்து விண்ணப்பப்படிவங்களும் முறையாகவும் சரியாகவும் பூரணப்படுத்தப்பட்டு **2023.04.28** ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் திணைக்கள தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளர் ஊடாக (சபரகமுவ மாகாண மாகாண சபை தவிர்ந்த ஏனைய மாகாண சபைக்கு உள்வாங்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களின் விண்ணப்பபடிவத்தை குறித்த மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதானச் செயலாளரின் சிபார்சு உடன் முன்வைக்க வேண்டும்) **“செயலாளர், கல்வி, தகவல் தொழில் நுட்பம் மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கான அமைச்சு சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி”** என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

அத்துடன் பல பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் அலுவலர்கள் இருப்பின், முதலாம் பந்தியில் குறிப்பிட்ப்பட்டுள்ள பதவிகளுக்கு தான விண்ணப்பிக்கும் பதவிகளை முன்னுரிமைப்படி வரிசைப்படுத்தல் வேண்டும். விண்ணப்பபடிவம் இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை கல்வி நிருவாக சேவையின் 1ஆம் தர பதவிகளுக்காக அலவலர்களை தெரிவு செய்தல்” என்று குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், விண்ணப்பம் கோரப்பட்ட இறுதித் தினத்திற்கு குறித்த தகுதிகளை அடையப்படாத விண்ணப்பங்கள் ஆகியன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.. விண்ணப்பித்தல் தொடர்பான காலதாமதம், காணாமல் போகுதல் போன்ற எந்த விதமான முறைப்பாடுகளும் சபரகமுவ மாகாண கல்வி,தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கான அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (மாதிரி விண்ணப்பபடிவம் www.moe.sg.gov.lk என்ற வலைதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்)

இங்கு பதவிகள் பலவற்றிற்கு விண்ணப்பிக்க முடியும். எனினும் நடாத்தப்படும் முறையான நேர்முகப்பரீட்சையின் போது பெறப்படும் புள்ளிகள் கவனத்தில் கொண்டு மேற்கூறிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரிகளை வெற்றிடம் காணப்படும் இடங்களுக்கு நியமனம் செய்வது பற்றிய இறுதித் தீர்மானம் சபரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளரைச் சார்ந்ததாகும்.

இவ்விளம்பரத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதாவது வேறுபாடு காணப்படுமாயின் சிங்கள மொழி மூல விளக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

S. Ra'c

**சுஜானி.ஆர்.விஜேதுங்க,**
செயலாளர்
கல்வி, தகவல் தொழிநுட்ப மற்றும்
கலாசார நடவடிக்கைகளுக்கான அமைச்சு,
சபரகமுவ மாகாண சபை.

**2023.04.03**